(இ) தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் சில அட்டவணைகளைத் திருத்தும் வரைவு விதி குறித்து.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரால் உள்ள கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) II வது, III -வது விவர அட்டவணைகளைத் திருத்தி மேற்படி சட்டத்தின் 17-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் மாநில அரசினால் பிறப்பிக்கப்படவிருக்கிற கீழ்க்காணும் வரைவு விதி அச் சட்டத்தின் (3) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக.

வரைவு விதி

தமிழ்நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் 17-வது பிரிவின் (1) உட்பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்படி சட்டத்தின் II -வது III -வது விவர அட்டவணைகளில் கீழ்க்காணும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

திருத்தங்கள்

மேற்சொன்ன விவர அட்டவணைகளில், 'ந.பை.' என்ற எழுத்துக்கள் வரும் இடங்களில் எல்லாம் 'காசு' என்ற சொல் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) அரசினர் மசோதாக்கள்

(அ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 8/1971)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, "1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 8/1971) என்ற மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்," என்று முன்மொழிகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவானது 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்டம் ஆளுநர் அவர்கள் பிறப்பித்ததை யொட்டி, இப்பொழுது இந்த மசோதாவை நான் இங்கு கொண்வருகிறேன். மோட்டார் வண்டிகள் திருத்த சட்டத்தில் 44-வது பிரிவில் 1939-ம் ஆண்டு சட்டத்தின்படி சில ஆர்.டி.ஏ., எஸ்.டி.ஏ. அவர்களை நியமிக்கின்ற வகையில் வழிவகைகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. 1957-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்டத்தின்மூலம் ஆர்.டி.ஏ. சிங்கிள் ஆபீசர் என்றும், எஸ்.டி.ஏ. ஒரு சிங்கிள் ஆபீசர் என்றும் வழிமுறைகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றன. 1969-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் திருத்தச் சட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டு, அது 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதியிலிருந்து அமலுக்கு வந்திருக்கிறது. இந்தச்

* 1971 ஏப்ரல் 2-ம் தேதிய சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS